අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/09/12/10/03/ (I) ඔබේ යොමුව / உமது இல. / Your Ref. දිනය / திகதி / Date 2024.06.

அனைத்து மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,

**சுபக புலமைப் பரிசில் நிகழ்ச்சித்திட்டம்**

புத்தாக்கம், அழகியல் மற்றும் விளையாட்டுத் துறையில் விசேட திறமைகளை வெளிக்காட்டும் க.பொ.த (உயர் தரத்தில்) கற்கும் மாணவர்களுக்காக இந்த சுபக புலமைப் பரிசில் நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இதன் கீழ் க.பொ.த (உயர் தரத்தில்) கற்கும் இரண்டு வருட காலப் பகுதியினுள் ஒரு மாணவருக்கு உச்ச பட்சம் ரூ. 50,000/ பெறுமதியான தொகையானது சுபக புலமைப் பரிசில் தொகையாக தவணை அடிப்படையில் உரிய மாணவர்களது வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடப்படல் வேண்டும்.

அதற்குரியதாக வெளியிடப்பட்ட 2020.12.15ம் திகதியும் 34/2020 இலக்கமும் உடைய சுற்றுநிருபம் மற்றும் 2022.12.30ம் திகதியும் 41/2022 இலக்கமும் உடைய சுற்றுநிருபம் ஆகியன இரத்துச் செய்யப்படுகின்றன என்பதுடன், இனிவரும் காலங்களில் வலுவில் இருக்கும் 2024.06.06ம் திகதியும் 22/2024 இலக்கமுடைய சுற்றுநிருபத்தின் ஆலோசனைகளின் பிரகாரம் செயற்படுமாறு தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் இந் நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தி, புலமைப் பரிசில் பெறுநர்களை முறையாக கண்காணிப்பதனூடாக விளைதிறன் மிக்க வகையில் நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கையெடுக்குமாறு தயவுடன் கோருகின்றேன்.

அதற்குரியதாக கீழ்வரும் விடயங்கள் தொடர்பில் தங்களது விசேட கவனத்தை செலுத்த விரும்புகின்றேன்.

01. மாகாண/ வலய மட்டத்தில் சுபக புலமைப் பரிசில் நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் ஒருவரை நியமித்துக் கொள்ள வேண்டும்.
02. சுற்றுநிருபத்தின் பிரகாரம் மாணவர்களை தெரிவு செய்து, தகுதிபெறும் மாணவர்களது பெயர் பட்டியலை கல்வி அமைச்சிற்கு அனுப்பிவைத்தல் மற்றும் அனுமதி பெற்ற மாணவர் பெயர் பட்டியலில் உள்ளவர்களுக்கு புலமைப் பரிசில் தவணைக் கொடுப்பனவுகளை வழங்கும் செயற்பாடுகளை வலயக் கல்வி அலுவலகத்தினூடாக மேற்கொள்வதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.
03. புலமைப் பரிசில்தாரர்கள் உரிய பாடசாலையில் தொடர்ச்சியாக கல்வி கற்கின்றனர் என்பதை அதிபரூடாக கண்காணிப்பதற்கு நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.
04. தங்களது மாகாணத்திற்குரியதாக புலமைப் பரிசில் பெறுவதற்கு அனுமதி வழங்கப்பட்ட புலமைப் பரிசில்தாரர்களின் எண்ணிக்கைக்கு போதுமான அளவில் நிதி ஒதுக்கீடு இவ் அமைச்சினால் மாகாணக் கல்வித் திணைக்களங்களுக்கு வழங்கப்படும் என்பதுடன், குறித்த நிதி ஒதுக்கீடுகளை வலயக் கல்வி அலுவலகங்களுக்கு தேவையானவாறு ஒதுக்கீடு செய்வதற்கு நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.

இப் பணியை வெற்றிகரமாக மேற்கொள்வதற்காக தங்களால் வழங்கப்படும் ஒத்துழைப்பினை பெரிதும் மதிக்கின்றேன்.

புதிய சுற்றுநிருபத்தின் சிங்கள மற்றும் தமிழ் மொழி மூலமான ஒவ்வொரு பிரதி வீதம் இத்துடன் தங்களுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றது என்பதுடன், புலமைப் பரிசில் நிகழ்ச்சித்திட்டத்துடன் தொடர்புடைய மேலதிக விபரங்கள் அவசியமெனின் கல்வி அமைச்சின் கல்விப் பணிப்பாளர் (பாடசாலை செயற்பாடுகள்), அவர்களை 0112784845 எனும் தொலைபேசி இலக்கத்தை தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

பீ.ஆர் காரியவசம்
மேலதிக செயலாளர் (பாடசாலை செயற்பாடுகள்)
செயலாளருக்காக